**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்**

முன்னிலை : **திரு. ப. சரவணன், பி.எல்.,**

கூடுதல் மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்

2023–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17–ஆம் நாள் வெள்ளிக் கிழமை

**இ.ம எண்.3/2022**

**உள்**

**அசல் வழக்கு எண்.182/2022**

1. திருமதி. சின்னம்மாள்
2. திருமதி. பெரியக்காள்
3. திரு. இளங்கோ
4. திரு. குணசேகரன்
5. திரு. ஜீவரத்தினம்
6. திருமதி. உஷாராணி
7. திருமதி. தங்கராணி
8. திருமதி. விஜயராணி
9. திருமதி. அம்சவள்ளி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. திரு. சபரி மணிகண்டன்
2. திரு. வேலுச்சாமி
3. திரு. கே. ராஜேந்திரன்
4. மிதுன்ராம் ப்ராபர்டீஸ் லிமிடெட்,

   அதன் நிர்வாக இயக்குனர் அவர்கள் மூலம்
5. திரு. ஏ. சங்கர்
6. திரு. என். பழனிச்சாமி
7. திரு. ஆர். சிவக்குமார்

8. திரு. வி. குமரவேல்

9. திருமதி. செல்லம்மாள்

10. திரு. பி. சரவணன்

11. திரு. பி. ஜீவா

12. D.V.N. Energy Solutions Pvt. Ltd

அதன் நிர்வாக இயக்குனர் அவர்கள் மூலம்

13. Shri Kumaran Medical Centre Pvt. Ltd

அதன் நிர்வாக இயக்குனர் அவர்கள் மூலம்

14. GPRS Energy Pvt. Ltd

அதன் நிர்வாக இயக்குனர் அவர்கள் மூலம்

... 1 முதல் 14 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

15. Sri Krishna Sun Power Private Limited
அதன் நிர்வாக இயக்குனர் அவர்கள் மூலம்

... 15–வது எதிர்மனுதாரர்/புரோபோஸ்டு 15 வது பிரதிவாதி

இம்மனு இன்று 17.03.2023–ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. பி. தண்டபாணி அவர்களும், 3 வது எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. டி. கென்னடி அவர்களும், 5 முதல் 15 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. வி. ஆறுமுகம் அவர்களும், ஆஜராகியும், 1, 2 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினர்களாக்கப்பட்டும், இரு தரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

1. 15–வது எதிர்மனுதாரரை அசல் வழக்கில் 15–வது பிரதிவாதியாக சேர்க்க வேண்டி கட்டளை 1, விதி 10 (2) சி.பி.சி.யின்கீழ் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள். அசல் வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் சொத்துக்களைப் பொறுத்து ஏற்பட்ட பாராதீனங்களை செல்லத்தக்கதல்ல என விளம்புகை வேண்டியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு நிலுவையில் இருக்கும்போது, 14–வது பிரதிவாதி, 04.05.2022 அன்று சொத்தின் ஒரு பகுதியை 15 வது பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார். ஆகவே, 15 வது எதிர்மனுதாரரை அசல் வழக்கில் 15 வது பிரதிவாதியாக சேர்க்க வேண்டுமென மனுதாரர்கள் கோரியுள்ளார்கள். 15 வது எதிர்மனுதாரர் தாக்கல் செய்த ஆட்சேபணையில், கிரையம் தக்க மறுபயனுக்காக கிரையம் பெறப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

3. அசல் வழக்கு பாகப்பிரிவினைக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும், பிரதிவாதிகளுக்கு இடையே பத்திரங்கள் செல்லத்தக்கதல்ல என விளம்புகை பரிகாரம் கோரியுள்ள நிலையிலும், வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு, தாவா 14 வது பிரதிவாதி, தாவா சொத்தில் ஒரு பகுதியை 15 வது பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ள நிலையில், அவர் இந்த வழக்கிற்கு முக்கியம் மற்றும் அவசியமான தரப்பினர். ஆகவே, அசல் வழக்கில் 15 வது எதிர்மனுதாரரை 15 வது பிரதிவாதியாக சேர்க்க அனுமதித்து இந்த மனு அனுமதிக்கப்படுகிறது.

முடிவாக மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2023–ஆம் வருடம் மார்ச் மாதம் 17–ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P SARAVANAN
Digitally signed by P SARAVANAN
Date: 2023.03.17 16:55:06 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
திண்டுக்கல்.
இ.ம.எண்.3/2022
உள்
அசல் வழக்கு
எண்.182/2022
உத்தரவு – தெளிவு
நாள் – 17.03.2023